13 நவம்பர் 2022

Newbec
NEW WAY OF BEING CHURCH

பொதுக்காலம் ஆண்டின் 33ஆம் ஞாயிறு
(6 ஆவது உலக ஏழையர் தினம்)

**மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்: ஒன்றிப்பு, பங்கெடுப்பு, மறைத்தூது**

மாதாந்திர கருப்பொருள்:
**உலக இளையோர் தினம் (நவம்பர் 20)**



# மன உறுதியோடு இருங்கள் வெற்றிப் பெறுவீர்கள்

இன்றைய வாசகங்கள் நமக்கு உலகமுடிவைப் பற்றி சிந்திக்க வைக்கின்றன. ஆண்டவருடைய நாள் வருகின்றது என்று நமக்குச் சொல்லப்படுகின்றது. முதல் வாசகத்தில் கடவுளின் வலிமையான வார்த்தைகளைக் கேட்கின்றோம். இறைவாக்கினர் மலாக்கியா காலத்தில் அன்றைய சமூகத்தில் தீயபழக்கவழக்கங்கள் இருந்தன.

**மனனம் செய்ய இந்த வார வசனம்:**

எதிர்நோக்கி இருப்பதில் மகிழ்ச்சி கொள்ளுங்கள்; துன்பத்தில் தளரா மனத்துடன் இருங்கள்; இறைவேண்டலில் நிலைத்திருங்கள்.

(உரோமையர்: 12: 12)

ஆணவக்காரர்களுக்கும் அக்கிரமங்கள் செய்வோருக்கும் தண்டனை உண்டு, அவர்கள் அழிக்கப்படுவார்கள் என்று மலாக்கியா மூலமாக கடவுள் எச்சரித்தார். ஆனால் அவருடையப் பெயருக்கு மரியாதை செலுத்துவோருக்கு உரிய வெகுமதி உண்டு. அவர்கள் பாதுகாக்கப்படுவார்கள்.

தெசலோனிக்கர்களுக்கு எழுதிய முதல் கடிதத்திற்குப்பின் பல மாதங்களுக்குப் பிறகு பவுல் மீண்டும் ஒரு கடிதம் எழுதுகிறார். இறுதிக்காலத்தில் அவர்களுக்கு வரப்போகும் கோபத்திலிருந்து இயேசு அவர்களை விடுவிப்பார் என்று முன்னர் அவர் எழுதியிருந்தார். இப்போது அவர்களை ஊக்குவிக்கும் வகையில் எழுதுகிறார். அவரையும் அவருடன் உடன் பணிபுரிபவர்களையும் பின்பற்றுமாறும் கூறுகிறார். அவர்கள் இரவும் பகலும் கடுமையாக உழைத்ததாகவும், கைமாறு பெறுவதற்குத் தகுதியுடையவர்களாய் இருந்தும் அவர்களிடமிருந்து எதையும் எதிர்பார்க்கவில்லையென்றும் கூறுகிறார். உழைக்காதவன் உண்ணலாகாது என்று கூறிய வார்த்தையை மீண்டும் வலியுறுத்துகிறார். கடவுள் மீதுள்ள நம்பிக்கையில் நாம் விடாமுயற்சியுடன் உழைக்க வேண்டும். இல்லையெனில் நாம் ஆவியில் குன்றிவிடுவோம் என்றும் கூறுகிறார்.

நற்செய்தியில் யெருசலேம் ஆலயத்தின் அழிவைப் பற்றியும், இறுதிக்காலத்தின் முடிவைப் பற்றியும் கூறுவதோடு, அப்போது நாம் விடாமுயற்சியுடனும் இருக்கவேண்டுமென்று இயேசு எடுத்துரைக்கின்றார். அழிவைப் பற்றி அச்சம் கொள்ளத் தேவையில்லை. அழிவு, துரோகம், பாடுகள் ஆகியவை வந்தே தீரும். அரசியல் மற்றும் சமய நிறுவனங்கள், குடும்பம், உடல்நலம் ஆகிய அனைத்தும் அழிந்துபோகும். ஆனால் அதைப் பற்றி முன் கூட்டியே கவலைப்படவேண்டாம் என்று இயேசு கூறுகிறார். இது ஒரு காலத்தின் நிறைவு மற்றும் புதிய காலத்தின் தொடக்கம். அவருக்கு சாட்சிகளாய்த் திகழ இது ஒரு அரியவாய்ப்பு. நம்முடைய எதிரிகளை வீழ்த்த அவரே நமக்குத் தேவையான வார்த்தைகளையும், ஞானத்தையும் அளிப்பார். கிறிஸ்துவின் உடலாக இருக்கும் நாம் கிறிஸ்தவர்களாக அவரின் மாட்சியையும், வாழ்வையும் எடுத்துரைத்து சாட்சிகளாக இருக்கவேண்டியது நமது பணி. நாம் அழிந்துபோகமாட்டோம் என்று கிறிஸ்து தந்த வாக்குறுதி நம்மிடம் உள்ளது. **மீட்பு நம்முடையது அதில் நாம் உறுதியாய் நிலைத்து நிற்போம்.** ✤

**இன்றைய வாசகங்கள்:**

மலாக்கி 4: 1-2;
திருப்பாடல்: 98: 5-9;
2 தெசலோனிக்கர்: 3: 7-12;
லூக்கா: 21: 5-19.

INTERNAL CIRCULATION ONLY
BUL 46/2022

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org